அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2021/2022 - பிரான்சு

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஆறு

## நேரம்: 210 நிமிடங்கள்

**முதலாம் வினாவிற்கும், ஏனையவற்றுள் நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

1. அ. நீர் கற்ற தோடய மங்களத்தின் இராகம், தாளம், இயற்றியவர் என்பவற்றினைக் குறிப்பிட்டு, அதில் இரண்டாவது கண்டிகையின் இராக, தாளத்தினையும் குறிப்பிட்டு, அதன் தீர்மானத்தினைத் தாள, அங்க குறியீட்டில் எழுதி, அதன் சாகித்தியத்திற்குரிய கருத்தினையும் எழுதுக.

(15 புள்ளிகள்)

ஆ. டமருயதியை இறுதியாகக் கொண்ட ஆதிதாளம், நான்கு ஆவர்த்தன கோர்வை ஒன்றினை தாள, அங்க குறியீட்டுடன் எழுதுக. (5 புள்ளிகள்)

2. “ஒரு பரதநாட்டிய கச்சேரியினை மெருகூட்டுவதில் பக்கவாத்தியங்களின் பங்களிப்பு” என்ற தலைப்பில் கட்டுரை வரைக. (16 புள்ளிகள்)

3. தாள தசபிராணன்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் மார்க்கம், கிரியை கிரஹம், அங்கம், லயம் என்பவற்றை விளக்குக. (16 புள்ளிகள்)

4. வடமோடி, தென்மோடி கூத்துக்களுக்கிடையிலான, ஆட்ட முறைகளை விளக்குக.
(16 புள்ளிகள்)

5. கிராமிய நடனங்களைக் குறிப்பிட்டு, பக்தியை மையமாகக் கொண்ட நடனம் இரண்டினை விளக்குக. (16 புள்ளிகள்)

6. கேரள மாநிலத்துக்குரிய ஆடல் வகையினைக் குறிப்பிட்டு, அவ் ஆடலுக்குரிய தோற்றம், வளர்ச்சி, சமயபின்னனி, இசை, உடை, அரங்க வெளிப்பாடு இவற்றினை தொகுத்து விளக்குக.
(16 புள்ளிகள்)

(ம.ப.பா)

7. ஈழத்து கலைஞர் லீலாம்பிகை செல்வராஜா அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும், நடனக்கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளையும் தொகுத்து எழுதுக. (16 புள்ளிகள்)

8. உலகளாவிய ரீதியில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வைரஸ் தாக்கத்தில் இருந்து மீண்டெழும், மாணவ சமூகத்தை, ஆற்றுகைப்படுத்தும் பணியில் பரதத்தின் பங்கு. இக்கூற்றினை விளக்குக. (16 புள்ளிகள்)